# 100 நாள் வேலைத் திட்டம் : நிதி வழங்காத ஒன்றிய அராஜக அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!



100 நாள் வேலை உறுதி திட்ட நிதி ரூ. 4000 கோடியை தமிழ்நாட்டிற்கு தராமல் ஏழை எளியோர் வயிற்றில் அடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து திருமயத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றியச் செயலாளர்கள் ஆறு.சிதம்பரம் , இரா. கணேசன், மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், இரா.மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, தேவி, சீமானூர் கணேசன், முல்லை ரமேஷ், சுப.துரைராஜா, ஜான் பீட்டர், சிக்கந்தர், சாமி சுரேஷ், ஆனந்தன், அண்ணாதுரை உள்ளிட்ட கழக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பி.ஜே.பி.அரசை கண்டித்து கொரடாச்சேரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்றார். ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பூண்டி.கே. கலைவேந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்,



100 நாள் வேலை உறுதி பணிக்கு 4000 கோடி நிதி தராமல் தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து தஞ்சை தெற்கு மாவட்டம் சேந்தாக்கோட்டையில் மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றியச் செயலாளர் சத்திய விஜயன், மாவட்டப் பிரதிநிதிகள் சுப்புமாறன், மைக்கேல் அம்மாள், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், 100 நாள் வேலை பணியாளர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து முழக்கம் எழுப்பினர்.




திருச்சி மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் 100 நாள் வேலை உறுதித் திட்ட நிதி ரூ.4000 கோடியை தமிழ்நாட்டிற்குத் தராமல் ஏழை எளியோர் வயிற்றில் அடிக்கும் மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மண்ணச்சநல்லூர் ஒன்றிய செயலாளர் கே பி ஏ செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என் அருண் நேரு கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கதிரவன் எம்.எல்.ஏ., மற்றும் அம்பிகாபதி, ராஜசேகர், வி எஸ் இ இளங்கோவன் , ரமேஷ், வழக்கறிஞர் செந்தில், பானுமதி கண்ணன், சார்லஸ், ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் வெண்ணிலா சேகர் தலைமையில் வீரபாண்டி ஒன்றியம் அரியானூரில் 100 நாள் வேலைக்கான 4000 கோடி நிதியை ஒதுக்காத ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர் மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.



100 நாள் வேலை உறுதி திட்டத்தில் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் இச்சடியில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் முக.ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மு.கலியமூர்த்தி, க. மதியழகன், சு.சண்முகம், என்.சாத்தையா, டாக்டர் முக.முத்துக்கருப்பன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, எம்.எம்.பாலு, ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், வடவாளம் க.செ.மணிமாறன், குமாரவேலு, எஸ்.ஆரோக்கியசாமி, வடவாளம் அர்சுணன், ஏ.எஸ்.கருணாநிதி, முள்ளூர் நாகராஜன், டி.சுப்பிரமணியன், கே.மாரிமுத்து, ஆதி உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் 100 நாள் வேலைத் திட்ட நிதி, இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன் தலைமையில், துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார் வரவேற்புரையில் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டத்திற்கு சிறப்புரையாளர்களாக தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ மணி எம்.பி,கழக செய்தி தொடர்பு,துணை செயலாளர் தலைமை கழக பேச்சாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி,கழக இளம் பேச்சாளர் பெர்த்தி வினித், மற்றும் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பி.எஸ். சீனிவாசன் ஆகியோர் ஒன்றிய பாசிச பாஜக அரசுக்கு எதிராக கண்டன உரையாற்றினர்.




திருச்சி மாவட்டம் துறையூர், செங்காட்டுப்பட்டியில் துறையூர் மத்திய ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை தலைமையில் கடந்த நான்கரை மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட நிதி ரூ.4034 கோடியை தமிழ்நாட்டிற்கு வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் தர்மன் ராஜேந்திரன், முரளி, சரண்யா மோகன் தாஸ்,வீர மணிகண்டன், கஸ்டம்ஸ் மகாலிங்கம், செந்தில்,கார்த்திகேயன்,பெரியசாமி, சிக்கதம்பூர் வரதராஜன், தமயந்தி பிரபு,, 100 நாள் வேலை பணியாளர்கள் 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் செல்லமுத்து நன்றி கூறினார் .



வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி புளியம்பட்டியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்தராஜன் தலைமையில் கழக நிர்வாகிகள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.



சேலம் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் 100 நாள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தில். தமிழகத்திற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடியை வழங்க கோரி மாவட்டக் கழக அவைத்தலைவர். ஜி.கே. சுபாசு தலைமையில், ஒன்றிய செயலாளர் ரெயின்போ நடராஜன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. இதில் சா.சுப்பிரமணி, ஏ.ராஜேந்திரன், கே.ராஜா, முரளி. எம்.குணசேகரன், கே.எம்.ராஜா தமிழரசன்,பி.எஸ். கார்த்தி ராமச்சந்திரன்.. ராஜேஸ்வரி, வடிவேல், சௌந்தர்ராஜன் பிரபாகரன், தண்டாயுதம், கலைவாணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.